**நவம்பர்-10**

# TNPSC துளிகள்

- மகாராஷ்டிராவின் நாக்பூரைச் சேர்ந்த 18 வயதான சங்கல்ப் குப்தா இந்தியாவின் 71வது கிராண்ட் மாஸ்டர் ஆனார்.
    - சங்கல்ப் குப்தா செஸ் போட்டியில் 24 நாட்களில் மூன்று அவசியமான கிராண்ட் மாஸ்டர் விதிமுறைகளை நிறைவு செய்த பிறகு இந்த அந்தஸ்தினை அடைந்தார்.
- COP26 காலநிலை உச்சி மாநாட்டில் தொடங்கப்பட்ட இங்கிலாந்தின் கிளாஸ்கோ வழி முறைகளில் பிரதமர் நரேந்திர மோடி கையெழுத்திட்டார்.
    - இது 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்துப் பகுதிகளிலும் சுத்தமான மற்றும் மலிவான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான ஒரு சர்வதேசத் திட்டமாகும்.
- அமெரிக்காவில் தீபாவளியை ஒரு கூட்டாட்சி விடுமுறையாக அறிவிப்பதற்கான ஒரு மசோதாவினை பிரதிநிதிகள் சபையில் அறிமுகப்படுத்தியுள்ளதாக அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.
    - இது நியூயார்க்கைச் சேர்ந்த கரோலின் பி மலோனி என்பவர் தலைமையில் மேற்கொள்ளப் பட்டது.


# தமிழ்நாடுச் செய்திகள்

## வன்னியருக்கான 10% இட ஒதுக்கீடு குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு

- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த வன்னியர் சமுதாயத்திற்கு இந்த வகுப்பின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட 20% ஒதுக்கீட்டிற்குள் உள் ஒதுக்கீடாக 10.5% இட ஒதுக்கீடை வழங்குவதற்கான தமிழக அரசின் சட்டத்தினை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று உயர் நீதிமன்றம் கருதியது.
- மாநில அரசிற்கு உள் இட ஒதுக்கீடு அளித்திட அதிகாரம் தரப் படவில்லை என்று அது கூறியது
- எவ்வித தெளிவான சாதிக் கணக்கெடுப்பு இல்லாத போது எவ்வாறு அந்த சதவிகிதம் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டது என்று அது கேள்வி கேட்டுள்ளது.
- இட ஒதுக்கீட்டை ரத்து செய்யும் இந்த உத்தரவானது, இந்த ஒதுக்கீட்டின் கீழ் ஏற்கனவே கல்வி நிறுவனங்களில் சேர்ந்தவர்களின் சேர்க்கையைப் பாதிக்காது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

***பின்னணி***

- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20% இடஒதுக்கீட்டிற்குள் வன்னியர்களுக்கு என்று 10.5% இடஒதுக்கீடு வழங்குவதற்கான ஒரு சட்டமானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி அன்று முந்தைய அதிமுக அரசால் அறிவிக்கப்பட்டது.
- திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) தலைமையிலான தற்போதைய அரசு இந்த இட ஒதுக்கீட்டினை முழுமையாக அமல்படுத்த ஆணை ஒன்றைப் பிறப்பித்தது.



**QUOTA ALREADY IMPLEMENTED IN TN: GOVT**

➤ The PILs contended that if the reservation was allowed to be implemented, **Vanniyars and other sub-castes coming under 'vanniyakula kshatriya' community would enjoy exclusive 10.5%reservation in admission to higher education and government services, while other 25 castes under MBC and 68 under denotified communities will have to share remaining 7% quota**

➤ **"The GO would not, in any manner, affect the prospects of the members of the other MBCs** in the reservation category. **Nearly half-a-dozen similar cases are pending before the apex court and the SC had not stayed it," AG told the CJ bench of the Madras HC**

# தேசியச் செய்திகள்

## இந்தியப் பசுமை உத்தரவாதம்

- இந்தியா முழுவதுமான பசுமைசார் திட்டங்களுக்கென கூடுதலாக 750 மில்லியன் பவுண்டு அளவிலான நிதியினை வழங்குவதற்கான “இந்தியப் பசுமை உத்தரவாதத்தை” உலக வங்கியிடம் இங்கிலாந்து வழங்க உள்ளது.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற COP 26 உச்சி மாநாட்டில் இது குறித்து அறிவிக்கப் பட்டது.
- பசுமை உத்தரவாத நிதியானது தூய்மையான எரிசக்தி, போக்குவரத்து மற்றும் நகர்ப்புற மேம்பாடு போன்ற துறைகளில் தூய்மையான மற்றும் நெகிழ்திறன் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஆதரவு அளிக்கும்.
- வளர்ந்து வரும் நாடுகள் பசுமைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், தங்களுடையப் பொருளாதாரத்தை நிலையான முறையில் வளர்த்துக் கொள்ளவும் உதவும் வகையில் COP 26 உச்சி மாநாட்டில் "தூயப் பசுமை முன்முயற்சி" என்ற முயற்சி தொடங்கப் பட்டது.

## 1 டிரில்லியன் டாலர் பருவநிலை நிதி

- 2009 ஆம் ஆண்டில் முடிவு செய்த அளவில் பருவநிலை நிதியைத் தொடர முடியாது என்று இந்தியா கூறியது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான இலக்குகளைப் பூர்த்தி செய்ய குறைந்த பட்சம் $1 டிரில்லியன் தொகையேனும் இருக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்திக் கூறியுள்ளது.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 26வது சர்வதேச பருவநிலை மாநாட்டில் ஒத்த எண்ணம் கொண்ட வளர்ந்து வரும் நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் இது குறித்து தெரிவிக்கப்பட்டது.

## மின்சார வாகன மின்னேற்ற நிலையங்கள்

- 2070 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் நிகர-பூஜ்ஜிய கார்பன் என்ற ஒரு இலக்கினை அடைய உதவுவதற்காக ஆயிரக்கணக்கான மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை உருவாக்குவதற்கான திட்டங்களை அரசினால் இயக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.
- இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC - Indian Oil Corporation) நிறுவனமானது அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,000 மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை அமைக்க உள்ளது.
- அதன் செயல்பாடுகளில் இருந்து பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் திட்டங்களையும் அது உருவாக்கி வருகிறது.
- பாரத் பெட்ரோலியம் நிறுவனமானது அடுத்த சில ஆண்டுகளில் அதற்குச் சொந்தமான 7,000 எரிபொருள் நிலையங்களில் மின்சார வாகன மின்னேற்றத்திற்கான ஒரு உள்கட்டமைப்பை வழங்கும் திட்டத்தை அறிவித்தது.
- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனமானது இன்னும் மூன்று ஆண்டுகளில் நாட்டில் 5,000 மின்சார வாகன மின்னேற்ற நிலையங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை அறிவித்தது.

## இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகத்தின் ஒரு அறிக்கையின்படி, இந்தியாவில் 33 லட்சத்திற்கும் அதிகமான அளவில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகள் உள்ளனர்.
- மேலும், அதில் பாதிக்கும் மேற்பட்ட குழந்தைகள் மிகக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள பிரிவில் உள்ளதாக அந்த அமைச்சகம் குறிப்பிடுகிறது.
- இந்த எண்ணிக்கையானது போஷன் கண்காணிப்புச் செயலி மூலம் தெரிவிக்கப்பட்டது.
- மகாராஷ்டிரா, பீகார் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.

## LEADS குறியீடு 2021

- 2021 ஆம் ஆண்டு LEADS (பல்வேறு மாநிலங்களிடையே தளவாடப் பரிமாற்றங்களை எளிதாக்குதல்) குறியீட்டில் மதிப்பிடப்பட்ட 21 மாநிலங்களில் குஜராத் மாநிலமானது தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து ஹரியானா, பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- LEADS 2021 என்பது பல்வேறு மாநிலங்களிடையே தளவாடப் பரிமாற்றங்களை எளிதாக்குதல் என்பதைக் குறித்த 3வது அறிக்கையாகும் (முதலாவது - 2018; 2வது – 2019).
- இது இந்தியா முழுவதும் உள்ள தளவாட உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை அடையாளம் காண்பதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியது.
- இந்தக் குறியீட்டின் தரவரிசைகளானது மாநிலங்கள், வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமயமலைப் பகுதியில் உள்ள ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பிற ஒன்றியப் பிரதேசங்கள் என 3 தனித்தனி வகைகளில் வழங்கப்படுகின்றன.

*குறிப்பு*

- பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்தியா உலகின் 5வது பெரிய பொருளாதாரமாகவும், உலகளவில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாகவும் திகழ்கிறது.

**TOP 10 STATES**

| | 2019 | 2021 |
|---|---|---|
| Gujarat | 1 | 1 |
| Haryana | 6 | 2 |
| Punjab | 2 | 3 |
| Tamil Nadu | 5 | 4 |
| Maharashtra | 4 | 5 |
| Uttar Pradesh | 13 | 6 |
| Odisha | 10 | 7 |
| Karnataka | 7 | 8 |
| Andhra Pradesh | 3 | 9 |
| Telangana | 8 | 10 |

Source: Leads index of logistics, released by commerce and industry ministry

## கோவா கடல்சார் மாநாடு




- 3வது வருடாந்திர கோவா கடல்சார் மாநாடானது (GMC-21) கோவாவில் தொடங்கியது.
- இந்த மாநாட்டில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தைச் சேர்ந்த 12 நாடுகளின் கடற்படைத் தலைவர்களுக்கு இந்தியா தலைமை தாங்கும்.
- கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உருவாகி வரும் மற்றும் எதிர்கால கடல்சார்

பாதுகாப்பு சவால்களைத் திறம்பட கையாள்வதற்கான இயங்குந்தன்மையின் ஒரு முக்கியத்துவம் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

- இந்த மாநாட்டின் கருத்தரு "கடல் பாதுகாப்பு மற்றும் வளர்ந்து வரும் மரபற்ற புது அச்சுறுத்தல்கள்: இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் செயலூக்கமிக்கப் பங்களிப்பிற்கான ஒரு வாய்ப்பு" (Maritime Security and Emerging Non-Traditional Threats: A case for proactive role for Indian Ocean Region) என்பதாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## உலக மருந்து கொள்கைக் குறியீடு

- முதலாவது உலக மருந்துக் கொள்கைக் குறியீட்டில் இடம்பெற்ற 30 நாடுகளில் இந்தியா 18வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீடானது 2021 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் தீங்கு குறைப்பிற்கான கூட்டமைப்பால் வெளியிடப்பட்டது.
- நார்வே, நியூசிலாந்து, போர்ச்சுகல், ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் மனிதாபிமானம் மற்றும் சுகாதாரம் சார்ந்த மருந்துக் கொள்கைகளில் முதல் 5 நாடுகளாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- பிரேசில், உகாண்டா, இந்தோனேசியா, கென்யா மற்றும் மெக்சிகோ ஆகியவை குறைவான தரங்களைப் பெற்ற ஐந்து நாடுகள் ஆகும்.

| RANK | COUNTRY | SCORE |
|---|---|---|
| TOP 5 | | |
| 1 | Norway | 74/100 |
| 2 | New Zealand | 71/100 |
| 3 | Portugal | 70/100 |
| 4 | UK | 69/100 |
| 5 | Australia | 65/100 |
| 18 | India | 46/100 |
| BOTTOM 5 | | |
| 26 | Mexico | 35/100 |
| 27 | Kenya | 34/100 |
| 28 | Indonesia | 29/100 |
| 29 | Uganda | 28/100 |
| 30 | Brazil | 26/100 |


## நிலையான முறையில் நகர்ப்புறத்தைக் குளிர்மயமாக்குதல் கையேடு

- நிலையான முறையில் நகர்ப்புறத்தைக் குளிர்மயமாக்குதல் கையேடு என்பது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையாகும்.
- எதிர்காலத்தில் நகரங்கள் வாழ முடியாத அளவுக்கு வெப்பம் மிகுந்ததாக மாறும் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இது நிலையான முறையில் நகர்ப்புறத்தைக் குளிர்மயமாக்குதல் பற்றிய தீர்வுகளின் கலைக் களஞ்சியமாகும்.
- உலக நகரங்கள் உலக சராசரியை விட இரண்டு மடங்கு அதிகமாக வெப்பமடைகின்றன என்று இந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நகர்ப்புற வெப்பத் தீவுகளின் தாக்கமே இதற்கான ஒரு முக்கிய காரணமாகும்.




## முக்கிய தினங்கள்

### தேசிய சட்ட சேவைகள் தினம் – 09 நவம்பர்




- இந்தியாவில், இந்தத் தினமானது அனைத்துச் சட்ட சேவைகள் அமைப்புகளாலும் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.

- இந்தத் தினமானது 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரச் சட்டம் இயற்றப் பட்டதை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- சட்டச் சேவைகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு விதிகள் பற்றியும் வழக்காடுவோரின் உரிமைகள் குறித்தும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## உத்தரகாண்ட் உருவான தினம் – 09 நவம்பர்




- இந்த தினமானது 2000 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டதைக் குறிக்கிறது.
- நவம்பர் மாதம் 9 ஆம் தேதியானது 2000 ஆம் ஆண்டில் உத்தராஞ்சல் மாநிலம் உருவாக்கப் பட்ட.தைக் குறிக்கிறது.
- 2007 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்தின் பெயர் உத்தரகாண்ட் என மாற்றப்பட்டது.
- இந்த மாநிலம் கடவுள்களின் நிலம் அல்லது "தேவ் பூமி" என்று அழைக்கப்படுகிறது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கைர்சன் நகரானது உத்தரகாண்டின் கோடைக்காலத் தலைநகராக அறிவிக்கப்பட்டது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் குளிர்காலத் தலைநகரம் டேராடூன் ஆகும்.

## சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரம் - நவம்பர் 09 முதல் 14 வரை




- ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதம் 9 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை, சர்வதேச அறிவியல் மற்றும் அமைதி வாரமானது உலகளவில் அனுசரிக்கப்படுகிறது.

- இந்தச் சிறப்பு வாரமானது, மக்கள் தங்கள் சொந்த நாடுகளில் அமைதியை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சிக்கான சிறந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் வேண்டி ஊக்கமளிக்கிறது.
- 1986 ஆம் ஆண்டு சர்வதேச அமைதி ஆண்டாக அனுசரிக்கப்படுவதன் ஒரு பகுதியாக அறிவியல் மற்றும் அமைதிக்கான சர்வதேச வாரமானது முதன்முதலில் அனுசரிக்கப் பட்டது.

★★★★★★★★★★